# திறவுகோல்



2054 | புரட்டாசி | மாத இதழ்

வெளியீடு:
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# நிறமற்ற மலர்

உன் தாமரை முகம் பார்த்துத்
தடுமாற வழியில்லை
உன் தேன்மொழி கொஞ்சலிலே
திகட்டிட இயலவில்லை
உன் விழிச்சுழலின் பேரலையில்
விழுந்தமிழ முடியவில்லை
உன் வழித்தொடர்ந்து தொலைகின்ற
வரமேதும் வாய்க்கவில்லை
உரமான துயர்தந்து
திரமான வலிதந்து
கரம்விலகிப் போகின்றாய்
கனல்நுழைத்து வேகென்றாய்
உளமெல்லாம் காயங்கள்
உயிரெல்லாம் சாபங்கள்
பிணமான உடலோடு
பிழைத்திருத்தல் பெரும்பாடு
மழையற்ற நிலமானேன்
மணலற்ற நதியானேன்
மகிழ்வற்ற திருவிழாவாய்
மரமற்ற வனாந்திரமாய்
நீயற்ற நானானேன்
நிறமற்ற மலரானேன்
கூடில்லாப் பறவையென
குரலில்லாக் குயிலியென
நாடில்லா அகதியைப்போல்
நானின்றி வாழ்கின்றேன்
நிலவில்லா வான்வெளியில்
நட்சத்திரம் முள்காடு
நீயில்லா வாழ்வெனக்கு
நிரந்தரச் சுடுகாடு.

## மடிநிறைதல்

கடலலையாய் தொடரும்
உன் நினைவுகளில் மோதி
மெல்லக் கரைத்தகர்தல் சுகம்

உன் கால் நடைப்பாதைகளில்
தேயும் பிறைநிலவின்
மங்கிய ஒலியாய் வீழ்ந்து

## பின்தொடர்தல் வரம்

மலைவிழுந்து மரம்நுழையும்
நதிவழியில்
வண்ண மலர்ச்சருகாய்
உன் மடிநிறைதல் தவம்

கடைவிழியின் விசைநடுவே
மனம்வியர்த்து மதிதொலைத்து
நகங்கடித்து நாணிநிற்றல் சுபம்.

## வறுமையின் கடல்

மழை ஓய்ந்துவிட்டது
விதைகள் உயிர்த்தெழுகின்றன
பூமியின் தேகமெல்லாம்
வாடி வதங்கி வளர்கின்றன
கழுத்தை நெறிக்கும்
கடனும் வட்டியும்

வறுமையின் கடலைக்
கரையேறும் வாய்ப்பின்றித்
தத்தளித்து மூழ்கிடும்
விவசாயக் கரிசலில்
கருணையற்ற மழையின்
கோரத்தாண்டவத்திற்கு
முடிவுரை இல்லை

இடிமின்னலுடன்
காலிரங்கிப்பொழியும்

அடைமழையை வெறுத்து
வீதியில் நனைந்து வருகிறேன்
அறுவடைக்குத் தயாரான
கழினியின்மேல் பாய்கிறது
கண்மாய் உடைத்தெறிந்த
காட்டாற்று வெள்ளம்

பெய்யாமல் வதைக்கும்
பெய்யெனப் பெய்து
பேரழிவால் நையப்புடைக்கும்
பெருமையுடையது பேய்மழை

—

பொன். தெய்வா,
ஐவேலி.



---



ஹரிஸ்வரன் ரெங்கநாதன்
வகுப்பு: 4Q - சார்ஜா | வளைகுடா ஆசிய ஆங்கிலப் பள்ளி

# கனவே

என் உறக்கத்தை மறக்க செய்து
உன் நினைவை கொடு!
உன்னை எண்ணும் உள்ளம்
பன்மடங்கு எழுச்சி கொள்ளுகிறது!
கேலி, கிண்டல் பழகி போன ஒன்று
அதற்கு பதிலடி கொடுக்க
நீ எப்போதும் துணையாக இரு!

கனவே மகிழ்ச்சியோடு என்னுள் இரு!
நட்பு வட்டாரம் எனக்கில்லை
தினம் என்னோடு நீயும் கதை பேசு!

என் வலி மறக்க
எப்போதும் மருந்தாய் என்னுள்
கலந்துவிடு!
இழந்ததை எண்ணி எனக்கு
வருந்தமில்லை!
கனவே என் இதயம் நீயிருக்க
முயற்சி கொண்ட என்னை நம்பு
நம்பிக்கையோடு உனை சேரும் நாள்
கனவே மிக விரைவில்!

காதலோடு காத்திரு கனவே!
உனக்கு பரிசாக நானே கிடைப்பேன்!

--

க. பூமணி,
சென்னை.

---

# வாய்ப்புகளை பயன்படுத்துங்கள்..!



"வெற்றி பெற எல்லோருக்கும் விருப்பமிருக்கிறது, ஆனால் வெற்றி பெற தங்களை தயார் செய்து கொள்ள வெகு சிலருக்கே நேரம் இருக்கிறது." என்றார் ஒரு அறிஞர்.

இந்த உலகத்தில் பிறந்த எல்லா உயிரினங்களும் தங்கள் வாழ்வில் வெற்றி பெறவே முனைகின்றன.அதிலும் மனிதன் தான் கால் பதித்த எல்லா துறைகளிலும் வெற்றி பெறவே நினைக்கிறான். ஆனால் அதற்கு எல்லோரும் தன்னை தயார் செய்து கொள்வதில்லை. தோல்விகளை சந்தித்தாலும், துவளாமல் தொடர் முயற்சி செய்து நிலவின் தென் துருவத்தில் முதன் முதலில் வின் கலத்தை தரையிறக்கி உலக சாதனை படைத்துள்ளது இந்தியா.

இதன் பின்னணியில் தோல்வியில் இருந்து பாடம் கற்றதும், அதை சரிசெய்து தன்னை தயார் செய்து கொண்டு, இன்னும் கூடுதல் முயற்சியோடு விடாமுயற்சி செய்ததும் ஒவ்வொருவரின் நிஜ வாழ்க்கைக்கு சிறந்த உதாரணம். மேலும் அதில் திட்ட இயக்குனராக பணிபுரிந்த தமிழக விஞ்ஞானி வீரமுத்துவேல் தனக்கு கிடைத்த வாய்ப்பை மிக சிறப்பாக பயன்படுத்திக் கொண்டு, மிகக் கடினமாக உழைத்து நாட்டிற்கு பெருமை சேர்த்து

தந்துள்ளார். அரசு பள்ளியில் படித்து, சுமாரான மாணவனாக இருந்தவர், பொறியியல் படிப்பில் சேர்ந்த பிறகு அதன் மீது ஆர்வம் ஏற்பட்டு தொடர்ந்து படித்து இந்த உயரத்தை அடைந்துள்ளார்.

இது ஒவ்வொரு சாதாரண மனிதனுக்கும் உதாரணம். வாய்ப்புகள் வரும்போது அதை விடாமல் பயன்படுத்திக் கொள்வதும், அதற்காக உழைத்து வெற்றி காண்பதும், பெருமை சேர்ப்பதும் ஒவ்வொருவரின் கடமை. வாய்ப்புகளை வீணடித்துவிட்டு விதியின் மீது குறை சொல்வது இயலாமையின் வெளிப்பாடு.

நிலவில் மனிதர்களை இறக்க அமெரிக்கா அனுப்பிய முதல் விண்கலத்தில் இருந்தவர்கள் மைக்கேல் கோலிக் என்ற சீனியரும், நீல் ஆம்ஸட்ராங் என்ற ஜூனியருமே. விண்கலம் நிலவை அடைந்ததும் சீனியர் என்ற முறையில் கோலிக் தரையிறங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆனால் நிலவில் முதலில் தரையிறங்க கோலிக் தயங்கியதால், ஜூனியர் நீல் ஆம்ஸட்ராங் தரையில் இறங்க உத்தரவு வந்தது. எந்த தயக்கமுமின்றி நீல் ஆம்ஸட்ராங் நிலவில் கால் பதித்தார், வரலாற்றில் இடம் பிடித்தார்.

எனவே தயக்கமின்றி வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளுங்கள். அதில் வென்று காட்டுங்கள்.உலகம் உங்களை நினைவில் வைக்கும்.

—

*முனைவர் சா சம்பத்,*

தேசிய பயிற்சியாளர் மற்றும் உளவியல் ஆலோசகர், மன்னார்குடி.

---

# உழவைக் காப்போம்

நட்டுவெச்ச நாத்தக் காணும்
உழுது போட்ட நெலத்தக் காணும்!

வாங்கி வக்க வெதையும் இல்ல
அந்த வெதயத் திங்க குருவியும் இல்ல!

கண்டெடுக்க ஆளும் இலை
எங்க கதைய கேக்க நாதியும் இல்ல!

மழைய குடுக்க சாமியும் இல்ல
சாமியே குடுத்தாலும்
அத தேக்கி வைக்க எடமும் இல்ல!

நதிகள எணக்கிற திட்டமும் இல்ல
எணக்கவும் இங்க நதிகள் இல்ல!

ஒழவு பழக ஆளும் இல்ல
ஒழவன் ஒழவ எடமும் இல்ல!

—

*ரம்யா தங்கதுரை*

# பின்வரும் வரிகள்

கவிதையாக இல்லாமல்
இருக்கலாம்.
உங்கள்
வாசிப்பின் அழகில்
நிச்சயமது
கவிதையாகக் கூடும்.
/
எனக்கு யாரும்
விரோதிகளில்லை.
நான் ஒருத்தருக்கும்
துரோகி இல்லை.
/
என் கனவுப் பூக்கள்
அத்தனையும் என்னவளின்
புத்தம்புது தாவணியில்.
/
எல்லோரிடமும்
முகமூடி கைவசம்.
எனக்கான முகமூடி மட்டும்
ஏனோ என்னிடமில்லை.
/
வார்த்தைகள்
வசப்படாத போது
மௌனித்திருக்கிறது மௌனம்.
/
கூவலுக்கேற்ப குதிக்கிறது
சேவலின்
சிவப்புக் கொண்டை.
/
பிறைநிலவைப் பார்த்துக்
கொண்டிருக்கும் நேரம்
வானின் நிறம் கறுப்பு.
/
கேட்ட கேள்விக்கு
பதில் தெரியாத வானம்
அழுது தீர்க்கிறது
மழையாய்.
/
மௌனயுத்தத்தில் முடிய
வேண்டியதை வாய்ச்சண்டை வரை
வளர்த்து விட்டாய்.
/
நாணத்தில் என்னவளின்
கால்கட்டைவிரல் மண்ணில்
பறிக்கிறது வெட்கக்குழி.
/
வெட்கத்தை
அடகு வைக்கப் போனவள்
காதலோடு திரும்பினாள்.
/
கணவனை இழந்தவள் மட்டுமல்ல
மணலைப் பறிகொடுத்த ஆறும்
விதவைதான்.
/
நேற்றொரு வானம்
இன்றொரு நிலவு
நாளையொரு விடியல்.
/
எனதறைக்கு
அவள் வந்துபோய்
வெகுநேரமாகியும்
இன்னமும்
இருந்து கொண்டிருக்கிறது
அறையில் குட்டிக்கூரா வாசம்.
/
விதைகளைக் கொடுத்து விட்டு
விடைபெறுகிறாய்.
பிரிதொரு நாள்
நாம் சந்தித்துக் கொண்டது
அடர் வனமொன்றில்!

/
எல்லா நேரங்களிலும்
எல்லாவற்றிற்கும்
புன்னகையைப் பரிசளிக்க
முடியாது.
சிலநேரங்களில்
கண்ணீரை அர்ப்பணித்திடவும்
நேரலாம்.
/
குப்பைத் தொட்டியில்
கூக்குரலிட்டுக் கொண்டிருக்கிறது
குற்றமற்ற அன்பு.
/
அவளின் பிம்பத்தை
கொறிக்க வந்த
குளத்து மீன்கள்
அவள் விழிகளுக்கு
முத்தமிட்டுச் செல்கிறது.
/
துப்பாக்கிச் சுடும்
போட்டியில் முதலிடம்
நரிக்குறவனின் மகன்.
/
எந்தன் உறக்கம் தொலையும்
இரவுகளிலெல்லாம்
அன்பே உந்தன் ஞாபகம்.
/
நீயும் தொலைந்தாய்
நானும் தொலைத்தேன்
காலவரையின்றி
காற்று மட்டுமே
தேடித் திரிகிறது நம்மை.
/
உன் மீதுள்ள பிரியத்தின்
காரணமாகவே உன் கேள்விக்கான
பதிலைத் தேடியலைகிறேன்.
/
நடப்பிலும்
உச்சத்திலிருக்க
எப்போதும் தேடலிலிரு.
/
கனவை முன்மொழிந்து
உறங்கச் செல்லாதே!
கடமை உணர்ந்து விடியலில் எழு...!
/
கடலைப் பார்த்தபடி
என் கைப்பிடித்து
காதலைச் சொன்ன மறுகணமே
கடற்கரை மணலில்
வீடு கட்டத் தொடங்குகிறது
காதல்.
/
பூக்களைத்தான்
தொடுத்து வைத்திருந்தேன்.
கவிதைகளாய் மலர்ந்திருக்கிறது
அவள் கூந்தலில்.
/
என் தோட்டத்து பழங்களை
விழுங்கிய பறவைகள்;
ஏதோவோரிடத்தில் எச்சத்தில்
பதியமிடும் விதையை.

- ஆக்கம்
பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம்,
கைப்பேசி: 9443139353



# வகுப்பறையில் பாடம் கற்பிக்கும் மாணவர்கள்

## 1. அக்கிலா வீட்டு மனைப்பாம்பு!

தமிழ் மொழியில் இன்று எத்தனையோ சொற்கள் மருவி அவை வேறு விதமாக உச்சரிக்கப்படுவதை நாம் பார்த்துள்ளோம். அப்படித்தான் ஒருநாள் என் வகுப்பறையில் ஒரு மாணவர் ஓடி வந்து_

"சார் இந்த அக்கிலா தம்மோட வூட்டுல மலைப்பாம்பு ஒண்ண வளர்க்குது. ஒங்களுக்குத் தெரியுமா?" என்றதும் எனக்குத் தூக்கி வாரி போட்டது.

ஏனென்றால், பாம்பு என்ற சொல்லைக் கேட்டாலே எனக்குள் என் ஈரக்குலை நடுங்கும். பள்ளி செல்லும் அடர்ந்த அந்தக் காட்டு வழி நெடுக ஏதேனும் பாம்பு தூரத்தில் தட்டுப்படுகிறதா என்று மனத்தில் ஒருவித பயத்துடன் ஒண்டியாக ஓட்டிச் செல்வது என் வழக்கம்.

பல சமயங்களில் கண்ணில் விளக்கெண்ணெய் ஊற்றி வரும் என்னையே ஏமாற்றி குட்டிக் குட்டிப் பாம்புகளின் மீது இரு சக்கர வாகனத்தை ஏற்றி இரண்டு கால்களையும் தூக்கி அலறி இருக்கிறேன். நெஞ்சில் ஏற்பட்ட படபடப்பு அடங்க வெகுநேரம் ஆகும்.

சில நேரங்களில் என்னுடன் படபடத்த வாகனத்தைச் சற்று தொலைவில் நிறுத்தி பாம்பு பயத்தில் முட்டிக்கொண்டு வந்ததை கழித்துவிட்டு குனிந்து சக்கரத்தின் உள்ளே ஏதேனும் மாட்டிக் கொண்டு இருக்கிறதா என்று மெல்ல சோதித்ததில் இதுநாள்வரை ஒன்றும் அகப்படவில்லை.

அப்படியிருக்க...

அக்கிலாவை அழைத்துவரச் சொன்னேன்.

கும்பலாகச் சேர்ந்து ஒரு குற்றவாளியைப் பிடித்து காவல்நிலையத்தில் ஒப்படைப்பது போல அவளை அழைத்து வந்தனர்.

அவள் பேந்தப் பேந்த முழித்தாள்.

அழைத்து வந்த அனைவரையும் விரட்டி விட்டு மெதுவாகக் கேட்டேன்.

"மலைப்பாம்போட நீ குடும்பம் நடத்துறேன்னு எல்லாரும் சொல்றது உண்மையா?"

அப்படியெல்லாம் இருக்காது. இவர்கள் ஏதோ பொய் சொல்கிறார்கள் என்ற நம்பிக்கை வேறு. ஆனாலும் அந்தி வெய்யில் சுள்ளென்று முகத்தில் சுட்டுப் பொசுக்கியதில் முகத்தில் வேர்வை கொப்பளித்தது.

அந்த சமயத்தில் வீட்டு மணியும் பள்ளியில் அடித்து விட்டது.

அவள் சிட்டாக பாய்ந்து ஓடும் அவசரத்தில் இப்படிச் சொல்லி ஓடினாள்.

"ஆமா சார்!"

பள்ளியே பரபரத்தது. நாட்டுப்பண் ஒலித்து மாலை வணக்கம்; வெற்றி நிச்சயம் என்பதை வலது பெருவிரல் உயர்த்திக் காட்டி எல்லோரும் களைந்து கொண்டிருந்தார்கள்.

நான் இன்னும் அந்த அதிர்ச்சியில் இருந்து மீளவில்லை. மேற்கொண்டு கூடுதல் விவரங்கள் கேட்கலாம் என்றால் அக்கிலா அங்கில்லை. போயே விட்டாள்.

சக ஆசிரியர்களும் ஆச்சர்யத்தில் அதையே ஆமோதித்தார்கள்.

இது எப்படி சாத்தியம் என்று அங்கலாய்க்க கூட சேர்ந்து அவர்களும் ஏதோ எட்டாவது அதிசயத்தைப் பார்த்தது போல் வியந்து பேசிக்கொண்டு இருந்தார்கள்.

அட போங்கடா என்று நான் வண்டியைக் கிளம்பினேன். மனம் முழுவதும் அந்த மலைப்பாம்பையே சுற்றிச் சுற்றி விழுங்கிச் செரிக்க முடியாமல் திணறிக் கொண்டிருந்தது. வழியில் கிடப்பவை எல்லாம் பாம்பாக என்னைப் பயமுறுத்தியது.

படுத்ததும் உறங்கி விடும் என்னை அக்கிலா வீட்டு மலைப்பாம்பு உறங்க விடாமல் செய்து கொண்டிருந்தது...

பாம்பாய் வளைந்து நெளிந்து நான் படுக்கையில் தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தேன்.

விடியும் வரை காத்திருந்தேன். பொழுதும் பொலபொலவன விடிந்தது.

வழக்கத்திற்கு மாறாக அன்று பள்ளிக்கு முதல் ஆறாகப் போய்ச் சேர்ந்து விட்டேன்.

யார் யாரோ வந்தார்கள். அவளைக் காணவில்லை.

எங்கே என்று கேட்டதற்கு வந்து கொண்டிருப்பதாக அனைவரும் ஒருசேரக் கூவினர்.

கடிகாரம் எப்போதும் போலில்லாமல் மெல்ல நடந்து கொண்டிருந்தது. எரிச்சலும் ஆச்சர்யமும் எனக்குள் ஊஞ்சலாடிக் கொண்டிருக்க_

அக்கிலா வந்தே விட்டாள்!

"அது உன்னை ஒரேயடியாக முழுங்கி விடப்போவுது! மொதல்ல உங்க அப்பாவை அதைக் கொண்டி வுடச் சொல்லு! இல்லே கோட்டுருல உள்ள தீயணைப்புத் துறைக்குத் தகவல் தெரிவிச்சுட்டு புடுச்சிப்

போவச்சொல்லு!"

மூச்சு விடாமல் அறிவுறுத்தினேன். அவள் அதைப் பெரிதாக சட்டை செய்வதாகப் படவில்லை. கரிய முகத்தில் அலட்சியம் பளிச்சிட்டது.

"சார் அது ஒண்ணும் பண்ணாது."

சலித்தபடி வாய் நிறைய சிரிப்புடன் இங்கும் அங்கும் நெளிந்தாள்.

அன்று மாலை வீட்டிற்கு போகும் முன்பு மீண்டும் ஐயம் தொனிக்க கேட்டேன்.

"மலைப்பாம்பு தானே?!"

"சார்! அது மனைப்பாம்பு."

"மலைப்பாம்பு தானே?!"

"ஐயோ சார் அது மலைப்பாம்பு இல்ல. மனைப்பாம்பாம்! அப்பா சொன்னிச்சு." மனைப்பாம்பு. அப்படி ஒன்றை நான் கேள்விப்பட்டதே இல்லை.

மனைப்பாம்போ, மலைப்பாம்போ ஆக மொத்தத்தில் ஏதோ ஒரு பாம்பு. என்னை குலை நடுங்க வைக்கும் பாம்பு.

இதில் கொடுமை என்னவென்றால் 'அது பாட்டுக்கு வருமாம். யாரையும் ஒன்றும் செய்யாதாம்!'

இப்படிப்பட்ட பேச்சு வேறு. எனக்கு அந்தக் குடும்பத்தை நினைத்து ஒரே பயம். கும்பிடாத சாமி எல்லாவற்றிடமும் வேண்டிக் கொண்டேன். எப்போதும் நான் எனக்காக எதையும் வேண்டுவதும் இல்லை. அதற்காக கையூட்டு கொடுக்க நினைப்பதும் இல்லை. ஏனெனில், எந்தக் கடவுளும் மனிதரை நம்பியிருக்கவில்லை.

பல்வேறு பணி நெருக்கடியில் நான் அதை மறந்து சாரி மறத்துப் போயிருக்க...

அக்கிலா ஒருநாள் அவளாகவே ஓடோடி வந்து சிரித்துக் கொண்டே சொன்னது நன்றாக ஞாபகத்தில் இருக்கிறது.

"சார்! உங்களுக்கு ஒண்ணு தெரியுமா? எங்க வீட்டு மனைப்பாம்பு எங்கேயோ போயிட்டு!!"

அதுவரை என்னை விழுங்கி வயிற்றில் செரிக்காமல் வைத்துக் கொண்டிருந்த அந்த மலை(னை)ப்பாம்பு என்னை உயிருடன் 'பிழைத்துப்போ'வென்று கக்கிவிட்டு எங்கோ சென்று கொண்டிருந்தது...

—

வகுப்பு தொடரும்...

முனைவர் மணி கணேசன்.

# யாது அறம்

கானல் நீராய் வாழ்க்கை பயணமே..
காணும் யாவும் கரைந்து போகுமே..

நாணல் தன்னை வளைத்து வாழ்வதால்..
பெரும் புயலில் கூட நிலைத்து
வாழுமே..

நகல் தானே உலகை மயக்குது..
அசல் எங்கும் மறைந்தே கிடக்குது..

வானில் தானே நிலவும் வாழுது..
பூமிக்கு எதற்கு ஒளியை கொடுக்குது?..

நீரில் தானே மீனும் வாழுது..
நீந்தி நீந்தி வாழ்வை கடக்குது..

கதிரவன் கிழக்கில் உதிக்கத்
தொடங்குது..
மேற்கில் தானே பயணம் முடிக்குது..

பறவைகள் உயரப் பறந்து போகுது..
இரையைத் தேடியே கூடு திரும்புது..

வெயிலைச் சுமந்தே மரங்கள் வாழுது..
நிழலினைக் கொடுத்து தானும் சிறக்குது..

காற்றால் தானே உயிர்கள் வாழுது..
காற்றைக் கண்டால் நெருப்பும்
வியக்குது..

மனிதனாய் பிறந்ததில் பெருமை
கொள்வோம்..
அன்பால் உலகை நித்தமும் வெல்வோம்..

அறத்தால் யாவும் அழகாய் வாழுதே..

மனிதயினம் மட்டுமே அறத்தை
தேடுதே..

உலக வாழ்க்கை கொஞ்ச காலமே..
இறந்த பின்பும் நிலைத்து வாழுவோம்..

—

வாழ்வியல் கவி,
(சா.நாகூர் பிச்சை)
திண்டுக்கல்.





**மா. நிரல்யா,**
**சிங்கப்பூர்.**

# பயணம் செய்

கனவில் பயணிக்கும்
எண்ணங்களை மட்டுமே
தூக்கிச்செல்ல பயணிப்பாயா..!

தொலையும் நேரங்களை
தொலைந்த நாட்களில் தேடி
பயணிப்பாயா...!

இருளுக்குள் அமிழ்ந்திருக்கும்
ஒளியை தேடி
பயணிப்பாயா....!

இனிய உறவில்
ஊஞ்சலாடும் மகிழ்வைத்தேடி
பயணிப்பாயா...!

காலமெல்லாம்
நைந்து கிடக்கும்
உணர்வில் உறங்கும்
உரிமைக்காக தோள்கொடுத்து
பயணிப்பாயா....!

நெடுந்தூரமாய்
பாதங்களில் வழிந்தோடும்
வலியை மறக்கவாவது
பயணிப்பாயா....!

எழுதும் வார்த்தைக்குள்
ஒளிந்திருக்கும் உள்
அர்த்தங்களை உணர
பயணிப்பாயா...!

சித்திரங்களில் மிளிரும்
வண்ணங்களாய் மாற
பயணிப்பாயா...!

மனம் உரைத்த
நிதர்சனங்களை
கட்டிக்கொண்டு
பயணிப்பாயா....!

பயணத்தில் இருக்கும்
தொடர் நிகழ்வாய்
மாற்றிக்கொள்ள
பயணிப்பாயா...!

எதை தூக்கிக்கொண்டாயோ
அதை இறக்கி வைக்க
பயணிப்பாயா...!

ஆழ்ந்த நித்திரையில்
கிடத்திய உடலை
தட்டி எழுப்ப
பயணிப்பாயா...!

ஒவ்வொன்றாய்
கூறாக்கிய நிகழ்வுகளை
கோர்வையாக்கி
எழுதுவதற்காக
பயணிப்பாயா...!

உனக்காக அல்ல
உன்னையும் தாண்டி
உணர்த்தும் ஒற்றை
சொல்லுக்காக பயணிப்பாயா..!

பயணப்படும்போதே
வாழ்க்கையும்
வாழ்த்துதலில் முந்துகிறதே
பயணப்படும் வாழ்க்கைக்காக

பயணிப்பாயா..!

பயணங்களை எழுதும்போது
பாதைகள் முளைக்கின்றன
முளைக்கும் பாதைகளில்
மலர்கள் பூக்கின்றன
பூக்களாய் மலர
பயணிப்பாயா...!

பூக்கும் மலர்களில்
மணங்களாய் மாற
பயணித்து செல்..!
மனங்களில் மலர்ந்து
நாளெல்லாம் பயணிப்பாய்...!

## தணியாத கோபம்

உள்வாங்கிய
பெருமூச்சில் ஏனோ
எதையோ எழுதியதைப் போல்
மேலும் கீழுமாய்
சூடாகி செல்கிறதே....

அடுக்கி வைத்த
வார்த்தைகளை அழகாய்
எடுத்து வசை பாடுகிறாய்
கனத்த வார்த்தைகள்
அளவில்லாமல் ஆடுகிறது
மற்றவர்களின் முகத்திலும்
உள்ளத்திலும்....

சின்னஞ்சிறு கற்களை
பதுக்கி வைத்த நெஞ்சத்தில்
உறித்து எடுத்து
விளையாடுகிறாய்
அதனால் உனை
கல்நெஞ்சக்காரன்
என்கிறார் போலும்....

எங்கிருந்து வந்தது
எதற்காக வந்தது
யோசித்தாயா ? என்றாவது.....!
உன்முகம் சிவந்து
செவ்வானமாய் நின்றாலும்
கைகள் நீண்டு
கால்கள் முளைத்து
களம் குதிக்கிறதே....

உன் வரவில்
மற்றவர்கள் முகம்
சுழித்து கொள்கிறார்கள்.
பெரியவர்களின் வார்த்தைகள்
சிலநேரம் மிதிபடுகிறதே...

உடலை முறுக்கி
உன்னை வருத்தி பலம் காட்டி
பலத்தைஅழிக்கும்
வித்தையை யாரிடம் கற்றாய்...?

கள்உண்டு போதையாகி சேதப்படுத்தி
சிதிலமடையும்
உள்ளத்தில் உனை நிறுத்தி
வைக்கிறாய் போலும்
வாழ்நாளெல்லாம் உனை
மறவாதிருக்க....

சாமி போதுமடா...
அடாவடிக்குள் அடியெடுத்து
அத்தனை பெயரெடுத்து
இவனா அவன்
என்றெல்லாம் காரி உமிழ்ந்து
ஈனப்பிறவியெடுப்பது

வாழ்க்கையா...?

அடர்வனத்தில்
மொழியறியா விலங்குகளாய்
சுற்றித்திரிவதுபோல்
அடங்காத வார்த்தைக்குள்
அடிபணியும் ஆளாகி
அலைவதா வாழ்க்கை..?

நீரருந்தும் வேர்களெல்லாம்
மண்ணை கிழித்து
உனை பார்க்க வருகிறதே..
அதைப்பார்த்து கற்றுக்கொள்...

கோபக்கனல்களை
வீசிவிட்டு அக்கினிகுண்டத்தில்
படுத்து உறங்காதே..
தண்ணிய நீரை வார்த்து
உனை சாந்தமாக்கு..
நிலவின் ஒளியாய்
வலம் வருவாய்.

—

ஞா. முனிராஜ்

---

# ஒன்றே ஒன்று தான்...

நிறைய செல்வம் இருந்தால்
அதிகமான புகழ் இருந்தால்
நினைத்ததை அடைந்தால்
தேவைக்கு உதவ வாய்ப்பு கிடைத்தால்
என சந்தோசம் மனிதருக்கு மனிதர்க்கு
மாறுபடலாம்
ஆனால் மகிழ்ச்சி என்ற 'உணர்வு ' ஒன்று
தான்...

------------

## இப்படி யோசித்தால்...

எனக்கு இது வேண்டும்
சரி
அதுக்கு தகுதியுள்ளதா
இல்லையா
ஒத்துக்கொள்ளும் நேர்மையும்
வளர்த்து கொள்ளும் ஆர்வமும்
உள்ளதா
ஆம் எனில்
முயற்சிக்க துவங்கு

என தன்னிடமிருந்து விலகி
மூன்றாம் மனிதனாய்
பார்த்தால்
'வெற்றி' தான்...

------------

## எங்கே போயின?

பிரிவு என்றால்
வருத்தம் தானே

செயல் என்றால்
முடிவில் தோல்வியும்

உண்டு தானே

விமர்சனங்கள் என்றால்
யாருக்குத்தான் இல்லை

வசை மொழிகள் என்றால்
எல்லோரும் பெற்றவர் தானே

என
அறிந்த
கேட்ட
தத்துவங்கள்
எங்கே போயின
தனக்கு என்று
வரும் போது

------------

## மீண்டும் மீண்டுமாய்...

வெற்றிக்குப்பின்னான
உழைப்பு
தக்க வைத்து கொள்ள

தோல்விக்குப்பின்னான
முயற்சி
இலக்கை அடைய

நேற்றைய
நல்ல நிகழ்வுகள்
மகிழ்ந்து புத்துணர்வு பெற

பதட்ட காலத்திலும்
நிதானம்
புத்தி சரியாய் பணி செய்ய

மகிழ்ச்சி நேரத்திலும்
ஆர்பாட்டமின்மை
மனமுதிர்ச்சி வெளிப்படுத்த

இழப்பு காலத்திலும்
விருப்பு வெறுப்பற்ற நிலை
காரணம் அறிந்து செய்ய

------------

## குறுங்கவிதைகள்

தவறுகளும் குற்றங்களும்
கால தாமதமும்
மன்னிக்கப்படுகையில்
நீங்க சொல்றதாலே

வார விடுமுறையில்
சொந்த பணிகளுக்காய்
திட்டமிட்டு அந்த நாளில்
அடுத்த வாரம்

வாசம் பிடித்து
உணவு அறியும்
ஆராய்ச்சியில் வெற்றி
அம்மாவின் சமையல்

உதவி கேட்டது
கிடைக்காது தெரிந்தது
மௌனத்தாலும் முகமொழியாலும்

நின்றுகொண்டேயான
செய்பணி குழு ஆலோசனை
நினைவு படுத்துகின்றன
தெருமுனை தோழமை கூட்டத்தை

கவலைப்படாதே
யாரோ யாருக்கோ சொன்னது செவியில்

ஆறுதலாய்

------------

## எட்டிப்பார்க்கும்...

வார ஆரம்ப நாளிலேயே
வார விடுமுறை நாளை நோக்கும்

பேசிக்கொண்டிருக்கும் போதே
எதிர் மனிதரின்
மனதை ஆழம் பார்க்க

முடிவு தெரியும் முன்னரே
வெற்றியாய் கனவு காணும்

உதவி கேட்டவுடனே
முடியாது என பதில் வருமோ
என அனுமான

எண்ணம்
பலர் மனதில்...

------------

## அவைகளை மட்டும்

நினைவுகளை
மன வெளியில்
அசை போட விரும்பினால்

பள்ளி, கல்லூரி
காலத்து நட்புகளுடன்
பேசி, சிரித்து
கழித்த பொழுதுகளை

மண விழாக்களில்
உறவுகளோடு
சேர்ந்து அனுபவித்த
மகிழ்ச்சி பொழுதுகளை

பெரும் போராட்டத்துக்குப்பின்
கிடைத்த வெற்றியை

மிக நீண்ட யோசனைக்குப்பின்
எடுத்த சரியான
முடிவை

பெரிய இழப்புக்குப்பின்
மீண்டு எழுந்த
கணங்களை

பொறுப்புகளை
சரியாய் நிறைவேற்றியதற்கான
பாராட்டை

எண்ணிப்பார்ப்போம்

பலன் ஒன்றாய்
மனம் குதூலிக்கும்

பலன் இரண்டாய்
நம்பிக்கை கொடுத்து
நாளையவைகள்
நன்றாய்
அமையும்

------------

## சிறுபான்மையினர்

பெரிய இழப்புக்கும்

தொடர் தோல்விக்கும்
அதிக அவமானங்களுக்கும்
எதிர்பார்ப்பின் ஏமாற்றங்களுக்கும்
கண்ணில் நீர்
பெரும்பாலான
நேரத்தில் வருவதால்
அவர்கள்
பெரும்பான்மையினர்

எதிர்பாராத உதவிக்கும்
நீண்ட இடைவெளிக்குப்பின்
உறவின்
நட்பின் சந்திப்பிலும்
தன்னை முழுவதுமான
புரிந்து கொண்ட
கணத்திலும்
வருவதும்
கண்ணீர் தான்

ஆனால்
அவர்கள்
சிறுபான்மையினர்

------------

## அதற்கும் முன்னே...

நம்மின்

சந்தோஷங்களை
சாதனைகளை
கணிப்பை
ஆற்றலை
பகிர்ந்தால்
நாளையவற்றுக்கு
நம்பிக்கை
கொடுக்கும் தான்

இழப்பை
சோகத்தை
ஏமாற்றத்தை
வேதனையை
பகிர்ந்தால்
மனது இலேசாகும்
தான்

ஆனால்
அதற்கு முன்னே

செவி கொடுப்பவருக்கு
கேட்க நேரம் இருக்கிறதா
விருப்பம் உண்டா
உணர்பவரா
இறுதியாய்
ஆனால் மிக முக்கியமாய்
கேட்கும் மனநிலையில்
இருக்கிறரா
என்பதை அறிவோம்..

------------

## இதுவும் தான்...

தன் பெயர் உள்ளவரை
மற்றொருவர் அழைக்க
'திரும்பி பார்ப்பதும்'

நேரம் அறிவிக்கும் போது
'கைக்கடிகாரம் பார்ப்பதும்'

கால் தடுக்கும் போது
'அப்பா என அலறுவதும்
மட்டுமல்ல...

தனியனாய்
செயலாற்றும் போதும்
யோசிக்கும் போதும்

'இப்படி நடந்து இருக்கக்கூடாது
என்றோ

'நான் சொன்னது
சரி தானே'

என்று புத்தி சொன்னதை
உதட்டு வார்த்தையால்
முணு முணுப்பதும்

'அனிச்சை' தான்...

------------

## சொன்னார்கள்

நான்
தனித்து
ஆழ்ந்த யோசனையில்
இருக்கையில்
'பெரிய அறிவு ஜீவி'

இழப்புக்கும்
ஏமாற்றத்துக்கும்
தோல்விக்கும்
ஏளனத்துக்குமான
சோகமாய்
கண்களிலிருந்து
நீரும்
முகவாட்டமுமாய்
இருக்கையில்
'படம் காட்டுகிறான்'

தொடர் முயற்சிக்குப்பின்னான
எதிர்பார்த்தது
கிடைத்ததால்
உற்சாகத்தோடு
பேசுகையில்
'தற்பெருமைக்காரன்'

மனதும்
புத்தியும்
செய்ய வேண்டியவை
பற்றி சிந்தனையாய்
இருந்ததால்
இயல்பாய்
பேச முடியாமைக்கு
'கர்வி'

என்
நிலைமை புரியாமல்
தெரிந்து கொள்ளும்
எண்ணம் இல்லாமல்
ஏதாவது காரணம்
என்ற யூகமும்
இல்லாதவர்கள்

இப்படிச்சொன்னார்கள்

------------

## இல்லை... இல்லை...

வாசிப்புகள் எல்லாம்
மனதுக்குள் செல்வது இல்லை

செல்வது எல்லாம்
யோசிக்க வைப்பதில்லை

யோசித்தவை எல்லாம்

ஞாபகம் இருப்பதில்லை

ஞாபகம் இருப்பது எல்லாம்
படைப்பு ஆவது இல்லை

படைப்புகள் ஆவது எல்லாம்
படிக்கப்படுவது இல்லை

படிக்கப்பட்டவைக்கு எல்லாம்
அங்கீகாரம் கிடைப்பது இல்லை

—

*A.S. சுந்தரராஜன்,*
மானாமதுரை,
தொடர்பு இலக்கம்: **9994920236**



---

# தேடல்

எனக்குள் என்னையே
தொலைத்தேன்

ஒரு நாள் அதைத் தேடி
அலைந்தேன்

எனக்குள் இருந்த பாவம் எங்கே
நான் சுமந்த நன்மைகள் எங்கே

மகிழ்ச்சிக்கும் துக்கத்திற்கும்
மந்த நிலை

நெகிழ்ச்சியும் நெருக்கடியும்
இல்லாதவொரு புதிய நிலை

துவக்கம் முடிந்ததா?
முடிந்ததில் துவங்குமா?

நேசம் துறவறம் பூண்டதோ
துறவறம் நேசிக்கத் தொடங்கியதோ?

நாடகம் வீதிக்கு வந்ததோ?
வீதியின் நாடகம் விதிமீறல் பெற்றதோ?

நிமிர்ந்த நிலையில் தூக்கம்
உறங்கும் நிலையில் விழிப்பு

சாமானியன் சீக்காளி ஆகிறான்
சீக்காளி குணமாகிப் போகிறான்

மொழி வனவாசம் சென்றது
மௌனம் வாசத்தைத் தொலைத்தது

பாழ் பிடித்த கரிய இரவொன்றில்
அடங்காத் தாகத்துடன்

இதயவொலி இருமிக் கொண்டே
இருக்கிறது

குழிவிழுந்த கண்களால்
பஞ்சடைத்த பார்வைக்கொண்டு

தனிமையில் உடைந்து
மூச்சிரைக்கும்
முனங்கலோடு

மரணங்கொத்தும் பறவையைத்
தடாவித் தேடத் தொடங்குகிறது
முதுமையின் தள்ளாட்டம்!

## காகித மனிதர்கள்...

அன்பும் நேர்மையும்
அடங்கிப் போச்சு
ஆணவமும் திமிரும்
பெருகிப்போச்சு

கொடுமையும் கொள்கையும்
கிடுகிடுவென வளர்ந்திடுச்சு
கொட்டும் தேளாய்
மனங்கள் மாறிடிச்சு

அடிமைத்தனம், அகங்காரம்
அடங்காமல் போயிடிச்சு
அடாவடித்தனம் அத்துமீறல்
அனைத்தையும் கொன்றிடிச்சு

கல்விக்கூடங்கள் எல்லாம்
காசு பார்க்கும் இடமாச்சு
காமுகர்கள் பெண்களைச்
சீரழிக்கும் காலமாச்சி

அரசியலும் ஆதிக்கமும்
ஏழைகளை முடக்கலாச்சு
ஆதரவு இல்லாமலவர்
ஏங்கிடும் கூட்டமாச்சு

கோடி கோடியாய்ப்பணம்
கொழித்திடும் கெடுதலாச்சு
கேடுகெட்டவர் கைகளோ
குவலயத்தில் ஓங்கலாச்சு

சாதியும் மதமும் பேதமையில்
சண்டை போடலாச்சு
சமதர்மம் சரிந்தழிந்து
நாசமாய்ப் போயிடுச்சு

பிறர்நலம் கருதாஅவலங்கள்
படையெடுத்து வரலாச்சு
புரையோடும் அநீதிகள்
பாம்பின் விஷம் ஒத்தாச்சு

கயமைத்தனம் வளர்ந்து
கடைவீதி நிரம்பிடிச்சி
கண்ணியமோ கண்ணீரோடு
காடுநோக்கிக் கிளம்பிடுச்சு

நீதியோ நிர்க்கதியாக
நிலைபெறாமல் போயிடுச்சு
நீசங்கள் அரியணையில்
நிமிர்ந்தே தழைக்கலாச்சு

காட்டு விலங்குகளாய்
உருமாறிய இதயங்கள்
காகித மனிதர்கள் பூமியிலே
வேடிக்கையின் சின்னங்கள்!

—

*Dr. ஜலீலா முஸம்மில்,*
ஏறாவூர்,
இலங்கை.

## சாயம் வெளுக்கின்றது...

காரியங்கள் ஆகுமட்டும்
காரணங்கள் பேசி நிற்பர்.
கர்மம் முடிந்தவுடன்
காலணிபோல்க் கழட்டிடுவர்.

பசப்பு வார்த்தைகளால்
பாசக்கதை கதைப்பர்.
பக்குவமாய்க் காய்நகர்த்தி
பச்சோந்தி உரு எடுப்பர்.

கைகட்டி வாய்பொத்தி
கைக்குழந்தை போல் இருப்பர்.
கைநிறையப் பெற்றதுமே
கைகழுவிக் கழுத்தறுப்பர்.

வாய்ப்பேச்சு வடிவம் எல்லாம்
மேல்ப்பூச்சு போலிருக்கும்.
வண்ணத்தில் கவர்ந்திழுக்கும் ஆனால்
உட்சுவரின் உடைசல்கள்
பின்னொரு நாள் வெளியாகும்..

கண்முன்னே... கதைப்பதெல்லாம்
கண்துடைப்புக் கதைகளாகும்..

நேற்றைய அனுபவங்கள்..
இன்றுரைக்கும் பல பாடங்கள்.

இதயத்தில் சிலர் வீற்றிருந்த
அரியணைகள்..
நெருஞ்சி முற்களென....

தான் செய்த வினையெல்லாம்...
தனக்கொரு நாள் நிகழ்ந்திடுகையில்..
இந்த வலியெல்லாம் கண்டு கொள்வார்.
அந்நாளில் தன்னைத்தானே நொந்து
கொள்வார்.

—

மக்கொனையூராள்

---

## நில் மழையே...

பார்த்து பார்த்து ரசித்த மழை
பரவசமாய் நனைந்த மழை
தொட்டு தொட்டு
விளையாடி தீர்த்த மழை
விடுமுறை தர
வரமாய் வந்த மழை
வெக்கை தணிக்கை வந்த மழை
என் வெட்கம் மறக்க வைக்கும் மைழ
இன்று
இவ்வளவு வெறுக்க வைக்கிரதே
ஏன்
மழையில் நனைந்த
மாதவிடாய்க்காரியாய்
நான்....

—

G. சூர்யகலா சரவணன் B.E
கண்டிதம்பேட்டை.



# ஆட்டு மந்தையில் நானுமிருக்கிறேன்

வீதி காக்கைகளுக்கு
வேறொன்றும் தெரிவதில்லை
என் வீட்டுக் கூரையில் அமர்ந்து
உன் பெயரை கத்துவதைத் தவிர

நீ சோறிட்ட நாயோடு
மணிக்கணக்காய் பேசுகிறேன்
என்ன மாயம் வைத்தாய்
உன் மௌனம் அதற்கும்

உன் வீட்டுச் சுவற்றில்
அங்கும் இன்னும் அலையும்
பூனைக்கு மச்சம் இருக்கிறது
அருகிக் காண்கிறேன்
உன் நடை அதற்கு

வழி மாறி சுற்றிக் கொண்டிருக்கும்
பட்டாம் பூச்சிக்கு
வழி காட்ட வேண்டும்
அதற்கு முன் உன் முகம் காட்ட
வேண்டும்

மேய்ந்து களைத்து
வீடு திரும்பிக் கொண்டிருக்கும்
ஆட்டு மந்தையில் நானுமிருக்கிறேன்
வழக்கம் போல வாசலில் நின்று
போ போ என்றாவது சொல்.....!

## ஆரஞ்சு முட்டாய் இனிப்பு

சீக்கிரம் உடம்ப குறைக்கறேன்
என்கிறாய்
சற்று நேரத்துக்கு உன்னுடல்
சுமக்கிறேன்

எதுக்கு குறைக்கணும்
முணுமுணுத்து சிரிக்கிறேன்
எதுக்கும் குறைக்கணும்
கலகலத்து சிரிக்கிறாய்

அதே இடம் அதே நேரம் அதே காதல்
நீ மட்டும் புதிது
பார்த்த நான் கூட வேறு

எதிர்ப்படும் வண்டியெல்லாம்
இசைக்கிறதோ
நினைப்புக்கு உன் சிரிப்பு
நினைக்க நினைக்க
இசை கோர்ப்பு

திரும்பு மாமா என்கிறாய்
கரும்பு சாறு செவியில்
முதுகு சாய்ந்து கொள்கிறாய்
திரும்பும் இதயம் நொடியில்

தாபம் தலைக்கேற
பின்கழுத்தில் உன் மூச்சு
சாபம் இவ்வுலகம்
திரும்பும் திசையெல்லாம்
லைட் போட்டு வெச்சிருக்கு

அந்தக்கதை செம
கொல்லுதுடா என்கிறாய்
இந்தக்கதை நல்லாருக்கே
அள்ளுதுடி என்கிறேன்

வயிறோடு வளையும்
கையில் கொஞ்சம் சூடு
கொஞ்சம் குளிரு
உன்னோடு வளையும் சாலையில்
கொஞ்சம் தேனீர்
கொஞ்சம் கவிதை

மூங்கில் காடு யானை மனது
கண்கள் தேட யாவும் நாமே
கையில் கிள்ளினாய்
பேருந்து நிற்கிறது

கனவை அனுப்பி விட்டு
காற்றில் முத்தமிடுகிறாய்
கவனம் புள்ளியாக என் இருத்தல்
தூரம் போகிறது

இனி

ஆரஞ்சு முட்டாய் இனிப்பு
வீடு வரைக்கும்
ஆந்தை முழி எமோஜி
அடுத்து பாக்குற வரைக்கும்....!

## மூக்குத்தி புன்னகை

வானத்திலிருந்து குதித்தவளா
அப்படித்தான் தோன்றுகிறது
சிறகுகளை
முத்தங்களில் வைத்திருக்கிறாள்

பேரன்பின் வடிவங்களுக்கு
கண் காது மூக்கு வைத்தேன்
அவள் முகம் வந்தது
மூக்குத்தி வெளிச்சத்தில்
முன் ஜென்பம ஞாபகம்

நட்சத்திரங்களின் மத்தியில்
காகம் பறப்பது போன்ற காட்சி
நன்றாக இருக்கும் அவள் வாசலில்

நிலவின் முதுகில் மினுமினுக்கும்
ஊதா நிறத்திற்கு மூலப்பொருள்
அவள் துப்பட்டா என்றால்
நம்பத்தான் வேண்டும்
மொட்டைமாடி கட்டிபிடித்தல் சாட்சி

ஜன்னல் அடைக்கும் கைகளில்
ஜாடைகள் ஏராளம் உண்டு
ஒன்று
வா வந்து அணைத்துக் கொள்

மடி மீது படுத்துக் கொள்வதில்
மாநிறக் கனவுகள் சூழும்
தவறி விழுந்த பிறகும் தாங்கொணா
அருவித்தனம் அச்சச்சோ
அவள் புன்னகை

## பேரூர் சிலை

பட்டாம் பூச்சிகள் வரும் போது
பதுங்கி இருக்கும் ஜிமிக்கி கம்மல்
தோள் புரளும் கூந்தல் மொழியில்
மூச்சு வாங்கும் மயிலிறகு
இசை குறிப்பு தூங்கும் வடிவம்
உன் புன்னகை
கூந்தல் விலக்கிய அரை வட்ட
நெற்றியில்
வெண்ணிற இரவின் முதல் நாள்
கன்னத்து மச்சத்தில்
கருப்பு தேன் துளி

உள்ளங்கை வெளுப்பில்
வீட்டுக்கே வெளிச்சம்
உச்சி வருடுகையில்
உயிர் நீவும் உன்மத்தம்
சுழன்று பார்த்த காற்றுக்கு
இடை ஏறி இறங்கும் நடை
அரூபம் கலைக்கும் நடைபயிற்சிக்கு
பொன் மத்தள அசைவு
பெருமைப் பட்டு கொள்
பருவங்கள் கழுத்தைக்
கட்டிக் கொண்டிருக்கின்றன
பேருண்மை சொல்லவா
பெண்ணல்ல நீ பேரூர் சிலை

—

கவிஜி
8807215457

---

# நன்னன்

இது அகிலா அத்தையின்
கூந்தல் கதை
அவள் அளகமும்
அகல் விளக்கும் ஒன்று
இரண்டுமே
எண்ணெய்யைக் குடிக்கும்

அகல் விளக்கு
எண்ணெய்யைக் குடித்து
இருளுக்கு ஒளியை அருளும்
ஆனால் அத்தையின்
கூந்தலோ
இரவுக்கே இருளைத் தரும் கருமை

பிருஷ்டம் தாண்டி
தழையும் கூந்தலில்
அத்தை பூக்களைப்
பெரும்பாலும் சூடுவதில்லை
கூந்தலுக்கு இயற்கையிலே
மணம் உண்டு என்று
தருமி சொல்லியதைக் கேட்டு
பூக்கள் சூடுவதில்
கருமியாகவே இருந்துவிட்டாள்

எல்லோருக்கும்
அத்தை மடி தான் மெத்தை
ஆனால் எனக்கு
என் அத்தையின்
குழல் கத்தை தான் மெத்தை
எப்போதும் பாட்டி அரைத்த
சிகைக்காயைத் தான்
அத்தை சிகைக்குத் தேய்ப்பாள்
தலை துவட்டும் போது
அவள் சிகையின்
சிகைக்காய்
மணம் நுகர
நாசிக்கே எச்சில் ஊறும்
துவட்டிய பின் வீடே
சாம்பிராணி
புகை மண்டலம் ஆகும்

நுனி வெடிப்பைப் போக்க
அத்தை கூந்தலை கொஞ்சம்
வெட்டிக் கொள்வதும் உண்டு
ஆனால் அவள் கூந்தல்
வெட்ட வெட்ட வளரும்
மூங்கில் கழி போல்
விரைவில் வளர்ந்து விடும்

அவள் மாமாவிற்கு
அம்மை போட்ட போது
நேர்ந்து கொண்டேன் என்று
தீடிரென்று ஒரு நாள்
சமயபுரத்தில்
மொட்டை அடித்துக் கொண்டாள்
என்னையும் அறியாமல்
நான் கண்கள் கலங்கி நின்றேன்
அவளோ முந்தானையில்
என் கண்ணீர் முத்துக்களை
அள்ளிக் கொண்டாள்

என் மனம்
அவளைப் பலகையில் அமர்த்தி
தலையில்
தண்ணீர் தெளித்து அவளது
நன்நெடுங் கூந்தலைச் சிரைத்து
மொட்டை அடித்த நாசுவனை
போரில் தோற்ற நாட்டு
மன்னனின் மனைவியின்
கூந்தலை மழித்து
தன் யானையை இழுக்க
கயிறாகத் திரித்த
சங்க காலக் கொடுங்கோலன்
'நன்னனாகவே' இன்றும்
கருதுகிறது.

—

**மு. ஆறுமுகவிக்னேஷ்**

---

# சுட்டு விரலின் சூடான கோரிக்கை

உலகெங்கும்
தொடுதிரையை
தடவிக் கொண்டிருக்கும்
விரல்கள் நானே

தட்டச்சு பலகையில்
அதிக இடங்களில்
சுதந்திரமாக நடனமாடும்
கால்கள் எனக்கே

நான் பிடித்த
எழுதுகோல் வழியே
வழிந்த சிந்தனைகளில்
வெடித்துள்ளன
எத்தனையோ புரட்சிகள்

'அவ்வளவு தான்'
என்ற மிரட்டலை
நாணின்றி
சொல்லிப் பாருங்களேன்
தெரியுமென் வீச்சு

கிரிக்கெட்டில்
அவுட் என வீழ்ந்தாலும்
பந்து மைதானத்தைத்
தாண்டி பறந்தாலும்
உயர்ந்து நிற்பவன் நானே

திருமண நிகழ்வில்
மணப்பெண் முகம் சிவக்க
விரல் பற்றி
வேள்விக்குழி மேடையை
வலம்வரும் நற்பலன்
பெற்றவன் நானே

வாக்களித்து
குடிமக்கள்
கடமையாற்ற
மை கறையை
நகமுகத்தில்
அகமகிழ்ந்து
ஏற்பவன் நானே

இன்னும் எத்தனையோ
உண்டு சொல்ல
எதையும் செய்யா
மோதிரவிரலுக்கு
எதற்கு கிரீடம்
என்னத்தச் சொல்ல

விரல்களில்
உயர்ந்தவனென்ற
மமதையில்
என்னை அழுத்தி
ஆபாசக்குறி
காட்டுகிறான்
நடுவன்

தவறைச்
சுட்டிக்காட்டுமெனக்கு
"ஆள்காட்டி" என்ற
துரோகப் பெயரேன்

அரசிதழில்
வெளியிட்டு
மாற்றுங்கள்
என் பெயரை
சுட்டு விரலல்ல
'சுட்டி விரல்' என்று

- பா. சிவகுமார்,

Y17, ராஜ் பவன், சென்னை 600 022.
அலைபேசி: 9003034340



# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.